கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 38/2017**

திரு. உதயகுமார் (D.W –4) **04.04.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. தாவா தாக்கல் செய்திருப்பது என்னுடைய அப்பாவின் மூத்த சகோதரர் என்றால் சரி. தாவா சொத்து என்னுடைய தாத்தா ராமசாமி கவுண்டர் உடையது என்றால் ஆமாம். ராமசாமிக்கு ஐந்து நபர்கள் வாரிசு என்றால் சரி. என்னுடைய பாட்டியும் என் தாத்தாவிற்கு ஒரு வாரிசு என்றால் ஆமாம். தாவா சொத்தை வாரிசு கிரமப்படி பிரித்து ஆளுக்கு ஒரு பாகம் கொடுக்க வேண்டும் என்றால் ஆமாம். என்னுடைய தாத்தா இறந்த சமயத்தில் என்னுடைய அப்பா தனியாக குடும்பமாக வசித்து வந்தார் என்றால் ஆமாம். என்னுடைய அப்பா அவருடைய திருமணத்திற்கு பிறகு தனிக்குடித்தனமாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரி. பிரின்ஸ் டையிங் பொறுத்து பங்குதாரர் நிறுவனமாக என்னுடைய பெரியப்பா, தாத்தா சேர்ந்து நடத்தியதாக ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை பார்த்தீர்களா என்றால் இல்லை. பிரின்ஸ் டையிங் வியாபாரத்தில் என்னுடைய அப்பாவும் சேர்ந்து வேலை பார்த்து வந்தார் என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அகிக்கிறேன் என்றால் தவறு.

2. என்னுடைய அப்பா திருமணம் முடிந்த பிறகு தனி குடித்தனம் சென்று விட்டதால் என் பெரியப்பா தாத்தாவுடன் பிரின்ஸ் டையிங்கில் சேர்ந்து பணிபுரியவில்லை என்றால் தவறு. என் அப்பா உயிருடன் இருந்தவரை பிரின்ஸ் டையிங்யில் சேர்ந்து வேலை பார்த்து வந்தார். பிரின்ஸ் டையிங் 220 கிலோலிட்டர் தண்ணீரை பயன்படுத்திக் கொள்ள திருப்பூர் முருகம்பாளையம் பொது சுத்திகரிப்பு நிலையம் அனுமதித்துள்ளது என்றால் ஆமாம். அதில் என்னுடைய பெரியப்பா வாதிக்கு 50 சதவீதம் பயன்படுத்திக்கொள்ள உரிமை உள்ளது என்றால் தெரியாது. என்னுடைய தாத்தாவிற்கு என் பெரியப்பாவா வாரிசு என்பதால் அவருக்கு பாத்தியப்பட்ட

உரிமையில் ஐந்தில் ஒரு பங்கு அவருக்கு உண்டு என்றால் சரி. தாவா சொத்து என்னுடைய தாத்தாவின் வாரிசுதாரர்கள் அனைவரின் பொது சுவாதீனத்தில் உள்ளது என்றால் ஆமாம்.

**6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னுடைய தாத்தா இறந்த பிறகு அவருடைய அசையா சொத்துக்கள் மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தை அவருடைய வாரிசுகள் அனைவரும் பொதுவாக இன்றைய தேதி வரை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் ஆமாம். பிரின்ஸ் டையிங்கில் என்னுடைய அப்பாவும் பெரியப்பாவும் என் தாத்தாவிடம் கூலிக்காக வேலை பார்த்து வந்தார்கள் என்றால் தவறு. அவ்வாறு வேலை பார்த்ததற்கு என்னுடைய தாத்தாவிடம் என் அப்பாவும் பெரியப்பாவும் கூலியாக பெற்றுக் கொண்டு விட்டார்கள் என்றால் தவறு. மேலே சொன்ன சொத்துக்கள் என்னுடைய தாத்தாவின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் தவறு. குடும்ப சொத்து தாவா சொத்துக்களை ஐந்து பாகங்களாக பிரித்து ஒவ்வொரு வாரிசுதாரர்களுக்கும் தலா ஒரு பங்கு கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ஆமாம். தயாநிதிக்கு தாவா சொத்தில் தனிப்பட்ட உரிமை எதுவும் இல்லை என்றால் சரி. தாவா சொத்தில் தயாநிதி தனிப்பட்ட சுவாதீனத்தில் இல்லை. என்னுடைய தாத்தாவின் வாரிசுகள் அனைவரும் கூட்டு சுவாதீனத்தில் உள்ளோம் என்றால் ஆமாம்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.04 18:41:01 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.